**STC.No.1131/2024** Date : 09.02.2026

PW1 – ராஜேஷ்குமார், த/பெ.சந்திரன்

எதிரி ஆஜர்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை :-</u>

எம்.ஏ.ஏஜென்ஸி என்ற பெயரில் நான் உரிமையாளராக இருந்து வியாபாரம் செய்து வருவதாக எனது தனிப்புகாரில் கூறியுள்ளேன் என்றால் சரிதான். 2018 ஆம் ஆண்டிலிருந்து எம்.ஏ.ஏஜென்ஸியை நான் நடத்திவருகிறேன். எம். ஏ ஏஜென்ஸி என்பது பெட்ரோல் பல்க் ஆகும். எம்.ஏ.ஏஜென்ஸிக்கு ஐசிஐசிஐ வங்கியில் கணக்கு வைத்திருக்கிறேன். பின்னர் 2022 ஆம் ஆண்டு பேங்க் ஆப் இந்தியா வங்கியில் மேற்படி ஏஜென்ஸிக்கு மற்றொரு வங்கி கணக்கு ஆரம்பித்தேன். ஐசிஐசிஐ வங்கியில் 617205015159 என்ற எண்ணில் ஒரு வங்கி கணக்கும், 617205015978 என்ற எண்ணில் ஒரு வங்கி கணக்கும் வைத்திருக்கிறேன். 617205015978 என்ற எண்ணில் ஒரு வங்கி கணக்கு ஆரம்பிக்கும் போது அதில் எனது தகப்பனாருக்குரிய 9442624278 என்ற செல்போன் எண்ணை வங்கியில் கொடுத்தேன் என்றால் இல்லை, 9740755155 என்ற எனது செல்போன் எண்ணைத்தான் வங்கியில் கொடுத்து கணக்கு ஆரம்பித்தேன்.

2) பொதுவாக செல்போன் மூலமாக பணபரிவர்த்தனை செய்யும் போது எந்த செல்போன் எண் வங்கி கணக்கிற்கு கொடுக்கப்பட்டுள்ளதோ, அந்த செல்போன் எண்ணுக்குரிய வங்கி கணக்கில்தான் அனுப்பப்படும் பணம் வரவு வைக்கப்படும் என்றால் சரிதான். நான் எம்.ஏ.ஏஜென்ஸி தொடங்கப்பட்ட காலத்திலிருந்து வருமானவரி செலுத்தி வருகிறேன் என்றால் சரிதான். எதிரிக்கு கொடுக்கப்பட்டதாக கூறப்படும் வழக்கு காசோலை தொகை மற்றும் அதற்காக எதிரி செலுத்தியதாக கூறப்படும் வட்டிதொகை ஆகிய அனைத்தும் வருமான வரி கணக்கில் காட்டப்பட்டுள்ளதா என்றால் காட்டப்பட்டுள்ளது. நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக கூறப்படும் நாளிலிருந்து எத்தனை நாளுக்கு முன்பாக எதிரி என்னிடம் பணம் கேட்டார் என்றால் சுமார் 10 நாட்கள் முன்பாக பணம் கேட்டார்.

3) இந்த வழக்கில் கூறப்படுவது போன்று எதிரிக்கு நான் பணம் கொடுத்ததாக கூறப்படுவதற்கு முன்பு பணம் ஏதேனும் எதிரிக்கு கொடுக்கவில்லை என்றால் சரிதான். எனது தகப்பனார் என்னுடன்தான் வியாபாரம் செய்து வருகிறார் என்றால் சரிதான். எதிரிக்கு பணம் கொடுத்ததாக கூறப்படுவதற்கு முன்பாக எதிரிக்கும் எனது தகப்பனாருக்கும் தான் நல்ல பழக்கம் என்றால் சரிதான். அப்போது நான் எதிரியை கேள்விபட்டுள்ளேன். எதிரிக்கு நான் ரூ.5 லட்சம் பணம் கொடுத்ததாக கூறப்படுவதை எங்கு வைத்து யார் முன்னிலையில் கொடுத்தேன் என்றால் எனது வீட்டில் வைத்து கொடுத்தேன். அப்போது எனது தகப்பனார் சந்திரனும், எதிரியின் தகப்பனாரும் உடன் இருந்தனர். நான் எதிரிக்கு பணம் கொடுப்பதற்கு முன்பாக எதிரி என்ன தொழில் செய்கிறார், அதன் மூலம் என்ன வருமானம் வருகிறது என்பது பற்றி தெரிந்து கொண்டேனா என்றால், இல்லை. ஆனால் எதிரிக்கு வாடகைக்கு விடுவதன் மூலம் வருமானம் வருவதாக எனது தகப்பனாரும், எதிரியின் தகப்பனாரும் பேசிக்கொண்டார்கள்.

4) எதிரிக்கு நான் பணம் கொடுக்க முடிவு செய்து பணம் கொடுத்ததாக கூறப்படும் நாளில்தான் எதிரிக்கு வாடகைக்கு விடுவதன் மூலம் வருமானம் வருவதாக எனது தகப்பனாரும், எதிரியின் தகப்பனாரும் பேசிக்கொண்டபோது தெரிந்து கொண்டேன் என்றால், பணம் வேண்டுமென எதிரி கேட்டபோதும் பணம் கொடுக்கும் நாளிலும் எதிரியின் வருமானம் பற்றி பேசிக்கொண்டோம். எதிரிக்கு எந்த கதவு எண் உள்ள வீட்டினை வாடகைக்கு விடுவதன் மூலம் வருமானம் பெற்று வருகிறார் என்பதை தெரிந்துகொண்டேனா என்றால், எதிரிக்கு சொந்தமாக வணிக வளாகம் ஒன்று உள்ளது அதிலிருந்து தான் வருமானம் வருகிறது. எதிரிக்கு சொந்தமாக வணிக வளாகம் உள்ளதா என்பதை தெரிந்து கொள்வதற்கு அது தொடர்புடைய ஆவணம் எதவும் வாங்கி பார்த்தேனா என்றால் இல்லை. எதிரிக்கு பணம் கொடுத்ததாக சொல்லப்படும் நாளில் ஏதேனும் ஆவணம் எதிரியிடமிருந்து வாங்கினேனா என்றால் இல்லை.

5) எதிரிக்கு பணம் கொடுத்ததாக கூறப்படுவதற்கு பின்னர் எதிரியிடம் கொடுத்த பணத்தை திரும்ப வாங்குவதற்கு அல்லது கொடுத்த பணத்திற்கு வட்டி வாங்கும் வகைக்கு எதிரியை செல்போனில் தொடர்பு கொண்டு நான் பேசியதுண்டா என்றால் இல்லை. எதிரியின் செல்போன் எண் என்னிடம் உள்ளதா என்றால் இல்லை. எனது

தகப்பனார் தான் எதிரியை தொடர்பு கொண்டு பேசுவார். நான் சொல்வது போன்று எதிரிக்கு எந்த காலத்திலும் பணம் எதுவும் கொடுத்ததில்லை என்றும், அவ்வாறு பணம் கொடுத்திருந்தால் எதிரியை நான் தொடர்பு கொண்டு பணம் பற்றி கேட்டிருப்பேன் என்றால் சரியல்ல. எதிரிக்கு கொடுத்ததாக கூறப்படும் பணத்தில் முதலில் ரூ.5 லட்சத்தினை வங்கி பரிவர்த்தனை மூலமும் பின்னர் ரூ.5 லட்சத்தினை ரொக்கமாகவும் கொடுத்ததாக கூறுகிறேன் என்றால் சரிதான், அவ்வாறு கொடுத்த பணத்தில் வட்டி பிடித்தம் செய்யாமல் முழு தொகையையும் தான் கொடுத்ததாக சொல்கிறேன் என்றால் சரிதான்.

6) ஜுன் 2023 வரை எதிரி வட்டி தொகையினை ஒழுங்காக செலுத்தி வந்ததாக எனது புகாரில் கூறியுள்ளேன். எதிரிக்கு எந்த தேதியில் பணம் கொடுத்தேன் என்றால், 15.09.2021 தேதியில் பணம் கொடுத்தேன். 15.10.2021 ஆம் தேதிக்கு பின்னர் எதிரி வாங்கிய பணத்திற்கு வட்டி செலுத்த ஆரம்பித்தார் என்றால் சரிதான். எவ்வளவு தொகையினை எதிரி வட்டியாக செலுத்த ஆரம்பித்தார் என்றால், வங்கி புத்தகத்தை பார்த்தால் கூற இயலும். எதிரி வட்டியாக செலுத்திய தொகையினை எந்த வங்கி கணக்கில் செலுத்தினார் என்றால், 617205015978 என்ற ஐசிஐசிஐ வங்கி கணக்கில் செலுத்தினார். எதிரி எவ்வளவு தொகை வங்கியின் மூலம் வாங்கினார், எவ்வளவு வட்டி தொகையினை செலுத்தினார் என்பதை காட்டுவதற்கு மேற்படி வங்கி கணக்கின் பரிவர்த்தனை விவரத்தினை தாக்கல் செய்ய தயாராக உள்ளேன் என்றால் சரிதான்.

7) நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக கூறப்படும் நாளுக்கு முன்னதாக எதிரியின் மனைவிக்கு எனது தகப்பனார் ரூ.10 லட்சம் பணம் கொடுத்து அதற்கு ஆதரவாக அடமான பத்திரம் ஒன்று எழுதி வாங்கினார் என்ற விவரத்தினை எனது தகப்பனார் என்னிடம் கூறினாரா என்றால், அது போன்று எதுவும் நடக்கவில்லை. நான் எதிரிக்கு பணம் கொடுத்ததாக கூறப்படும் நாளுக்கு முன்னதாக எதிரியின் மனைவிக்கு எனது தகப்பனார் ரூ.10 லட்சம் பணம் கொடுத்து அதற்கு ஆதரவாக அடமான பத்திரம் ஒன்று சிவகாசி சார்பதிவாளர் அலுவலகத்தில் 30.07.2021 ஆம் தேதியன்று ஆவண எண்.6639/2021 என பதிவு செய்யப்பட்டது என்றும், அதுபற்றிய விவரம் எனக்கு தெரியும் என்று சொன்னால், இந்த விவரம் பற்றி எனக்கு தெரியாது. எதிரியின் மனைவிக்கு ரூ.100 தொகைக்கு 3 வட்டி என என் தகப்பனார் ரூ.10 லட்சம் கொடுத்து அடமான பத்திரத்தில் ரூ.100 தொகைக்கு 2 வட்டி என காட்டியதால்

மீதமுள்ள 1 வட்டியை ஈடுசெய்யவும் அதற்கு ஆதரவாகவும், எதிரியிடமிருந்து வழக்கு காசோலைகள் உட்பட மற்றொரு காசோலையான 403411 என்ற காசோலையையும் பெறப்பட்டது என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது.

8) வழக்கு காசோலைகள் இரண்டும் 01.07.2024 ஆம் தேதியிட்டுத்தான் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டது என்றால் சரிதான். எந்த இடத்தில் வைத்து எதிரி கொடுத்ததாக கூறப்படும் வட்டி தொகையை கணக்கிட்டு அசல் தொகைக்கான காசோலைகள் கொடுக்கப்பட்டது என்றால் எனது வீட்டில் வைத்துதான் கணக்கிடப்பட்டது. அந்த சமயத்திலும் எனது தகப்பனார் உடன் இருந்தார் என்றால் சரிதான். எனக்கு எதிரிக்கும் எந்த காலத்திலும் பணம் கொடுக்கல் வாங்கல் இல்லை என்றும் எதிரியின் மனைவிக்கு என் தகப்பனார் கொடுத்த கடனிற்கு ஆதரவாக பெறப்பட்ட காசோலைகளை கொண்டு எதிரி மீது இந்த வழக்கினை என்னை வைத்து என் தகப்பனார் தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

9)30.07.2021 ஆம் தேதி எனது தந்தையிடம் எதிரியின் மனைவி வாங்கிய பணத்திற்காக அசல் மற்றும் வட்டியுடன் எம்.ஏ.ஏஜென்ஸிஸ் என்ற பெயரில் செலுத்தியதை மறைக்கும் பொருட்டுதான் என் மூலமாக எதிரி பணம் பெற்றதாக பொய்யான காரணங்களை உருவாக்கி என் தந்தையின் ஆலோசனையின் பேரில் வழக்கு காசோலைகள் என் மூலம் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டு இந்த வழக்கு எதிரி மீதுபொய்யாக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. எந்த காலத்திலும் எதிரி என்னிடம் பணம் வாங்கியதில்லை என்றும், எதிரி எனக்கு எந்த விதத்திலும் சட்ட படியான கடனை கொடுக்க வேண்டியதில்லை என்றாலும் சரியல்ல. எதிரிக்கு நான் உண்மையில் பணம் கொடுக்கவில்லை என்பதால்தான் பணம் கொடுத்ததாக கூறப்படுவது சம்மந்தமாக என்னால் வருமான சம்மந்தமான ஆவணங்கள் எதுவும் தாக்கல் செய்யாமல் இந்த வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.